சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண் :OS:134/2018

2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 03ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் பூங்கொடி (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

03.04.2024

நான் இந்த வழக்கின் வாதியின் மனைவி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஆறுமுகநாடாரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 1 ஆகும். சிவனாயியம்மாள் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 2 ஆகும். ஆறுமுகநாடாரின் வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 3 ஆகும். 08.06.1974 தேதியிட்ட தாவா சொத்திற்குரிய பட்டா பாஸ்புக் சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 4 ஆகும்.31.12.1988 தேதியிட்ட 12, 13 ம் பிரதிவாதிகள், 14ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையபத்திரம் SRO நகல் வா.சா.ஆ 5 ஆகும். வாதி 14ம் பிரதிவாதிக்கு அனுப்பயி சட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ 6 ஆகும். 05.05.2017 தேதியிட்ட அறிவிப்பை அனுப்பிதற்கான அஞ்சல் ரசீது சான்றிட்ட நகல் வா.சா.ஆ 7 ஆகும். 08.05.2017 தேதியிட்ட அறிவிப்பை 14ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை

அட்டை சான்றிட்ட நகல் வா.சா.ஆ 8 ஆகும். 11.07.2017 தேதியிட்ட 14 ம் பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ 9 ஆகும். 17.10.2016 தேதியிட்ட தாவா சொத்திற்கான வில்லங்கசான்று கணினி நகல் வா.சா.ஆ 10 ஆகும். 11.03.2018 தேதியிட்ட வாதி ரசல்ராஜ் அவர்களுக்கு கொடுத்துள்ள அதிகாரப்பத்திரம் அசல் வா.சா.ஆ 11 ஆகும்.பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.